செய்தி வெளியீடு எண். 422 நாள். 28.7.09

## செய்தி வெளியீடு – 28.7.2009

# மூன்று சம்பவங்களில் உயிரிழந்த 3 பேரின் குடும்பங்களுக்கு 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நிவாரண உதவி

## முதலமைச்சர் கலைஞர் ஆணை !

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் காரைக்குடி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. என்.சுந்தரம் அளித்த இரண்டு கோரிக்கைகளில் ஒன்றின்படி, அவரது தொகுதி புளியங்குடிப்பட்டி கிராமத்தில் எய்ட்ஸ் நோயால் இறந்த மதியழகன் என்பவரின் மனைவி திருமதி அமுதாவுக்கும் எய்ட்ஸ் நோய் பாதித்துள்ள நிலையில் அவருக்கு 50 ஆயிரம் ரூபாய் நிவாரண நிதியாகவும்;

மற்றொரு கோரிக்கையின்படி, விழுப்புரம் அருகே சாலை விபத்தில் உயிரிழந்த செக்கடி கேட் நா.புதூரைச் சேர்ந்த திருமதி சந்தியா என்பவரின் கணவர் திரு. முருகன் புற்றுநோயால் அவதிப்பட்டு வருவதால் அவருக்கு 50 ஆயிரம் ரூபாய் நிவாரண நிதியாகவும் ;

முதலமைச்சர் அலுவலகத்திற்கு வரப்பெற்ற மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிக்கையின்படி, நாமக்கல் மாவட்டம் நஞ்சை இடையார் கிராமத்தைச் சேர்ந்த முருகேசன் தென்னை மரம் ஏறும்போது தவறி விழுந்து இறந்தமைக்காக அவரது மனைவி திருமதி பழனியம்மாள் என்பவருக்கு 50 ஆயிரம் ரூபாய் நிவாரண நிதியாகவும் ;

–ஆக மூன்று வெவ்வேறு சம்பவங்களில் உயிரிழந்த 3 பேரின் குடும்பங்களுக்கும் தலா 50 ஆயிரம் ரூபாய் வீதம் மொத்தம் 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நிவாரண உதவியாக முதலமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து வழங்க ஆணையிடப்படுகிறது.

* * * *

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9